சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# இளைஞர் அணி செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்!



## பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் அனைத்து வட்டங்களிலும் நடைபெறும் நிகழ்வு!

**மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிவிப்பு!**

## இரண்டாவது பட்டியல்

### ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி

| வ. எண் | வட்டம் | வட்டச் செயலாளர் பெயர் (தலைமை) | தேதி | சொற்பொழிவாளரின் பெயர் |
|---|---|---|---|---|
| 1. | 111 | ஆர். பாபு | 10.12.2024 | பசும்பொன் ரவிச்சந்திரன் + ஜெயகுமரேஷ் |
| 2. | 111அ | எஃப். பீட்டர்ஜான் | 05.12.2024 | கடலூர் இள.புகழேந்தி + ராஜராஜேஸ்வரி |
| 3. | 113 | ப. மகேஷ் | 14.12.2024 | சென்னை அரங்கநாதன் + ரிஷி சந்தோஷ் |
| 4. | 113அ | த. தேவராஜ் | 04.12.2024 | போடி காமராஜ் + லேகா |
| 5. | 113ஆ | எம்.என். விஷ்ணு | 22.12.2024 | ஆடுத்துறை உத்திராபதி + பூபதி |
| 6. | 117 | எஸ். சத்தியபெருமாள் | 05.12.2024 | தூத்துக்குடி சரத்பாலா + ரிஷி சந்தோஷ் |
| 7. | 117அ | ல. தவமணி | 23.12.2024 | கந்திலி கரிகாலன் + எழும்பூர் கோபி |
| 8. | 118 | கோ. யுவராஜ் | 01.12.2024 | சைதை சாதிக் + மாறன் |
| 9. | 118அ | எஸ்.என்.கே.ராமன் | 18.12.2024 | பவானி கண்ணன் + தினேஷ் |

### ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி

| வ. எண் | வட்டம் | வட்டச் செயலாளர் பெயர் (தலைமை) | தேதி | சொற்பொழிவாளரின் பெயர் |
|---|---|---|---|---|
| 1. | 109 | க. சிட்டிபாபு | 16.12.2024 | சிவாஜி கிருஷ்ணமூர்த்தி + டெக்சின் ரொமேரியோ |
| 2. | 109அ | ச. டேவிட் இன்பராஜ் | 04.12.2024 | சென்னை அரங்கநாதன் + கோகுல் |
| 3. | 110 | கே.எஸ்.தினேஷ் பிரபு | 03.12.2024 | சைதை சாதிக் + செ. ஜோதி |
| 4. | 110அ | த. குணசேகர் | 11.12.2024 | ராஜீவ்காந்தி + மாறன் |
| 5. | 112 | த. பரி | 23.12.2024 | தக்கோலம் தேவபாலன் + யாசர் அராபத் |
| 6. | 112அ | மு.மோகன் | 14.12.2024 | சேலம் சுஜாதா + சாய் ரித்திக் சக்திவேல் |

### அண்ணாநகர் தெற்கு பகுதி

| வ. எண் | வட்டம் | வட்டச்செயலாளர் பெயர் (தலைமை) | தேதி | சொற்பொழிவாளரின் பெயர் |
|---|---|---|---|---|
| 1. | 105 | N. அதியமான் | 19.12.2024 | மதிவதனி + திருச்சி சேகர் |
| 2. | 105அ | இரா. பொன்னுரங்கம் | 06.12.2024 | தூத்துக்குடி சரத்பாலா + பார்கவி |
| 3. | 106 | ப. மகேஷ்ராஜா | 12.12.2024 | சைதை சாதிக் + ஷேவிதா |
| 4. | 106அ | இரா. நவீந்திரகுமார் | 16.12.2024 | சேலம் சுஜாதா + பேரரசன் |
| 5. | 107 | கருணா (எ) தெ.கருணாநிதி | 29.12.2024 | ஈரோடு இறைவன் + சிவரஞ்சனி |
| 6. | 107அ | வி.எம்.சிவா | 10.12.2024 | நெல்லக்குப்பம் புகழேந்தி +கோகுல் |

### அண்ணாநகர் வடக்கு பகுதி

| வ. எண் | வட்டம் | வட்டச்செயலாளர் பெயர் ((தலைமை) | தேதி | சொற்பொழிவாளரின் பெயர் |
|---|---|---|---|---|
| 1. | 100 | ஆ. ஏகாம்பரம் | 17.12.2024 | பவானி கண்ணன் + கீர்த்தனா |
| 2. | 100அ | கு. பாபு | 02.12.2024 | சைதை சாதிக் + தினேஷ் |
| 3. | 101 | க. கோவிந்தராஜ் | 28.12.2024 | நாஞ்சில் சம்பத் + கீர்த்தனா |
| 4. | 101அ | சி.பி.திருமலை | 11.12.2024 | பொன்னேரி சிவா + பார்கவி |
| 5. | 102 | பி. சந்திரசேகர் | 06.12.2024 | கடலூர் இள.புகழேந்தி + அருண் |
| 6. | 102அ | M.G.ரவிக்குமார் | 13.12.2024 | கரூர் முரளி + வி. தினேஷ் |
| 7. | 103 | P. ஜெய்சங்கர் | 30.12.2024 | மதிவதனி + ராஜராஜேஸ்வரி |
| 8. | 103அ | கே.அருள் கண்ணன் | 09.12.2024 | பசும்பொன் ரவிச்சந்திரன் + பூபதி |

### சேப்பாக்கம் பகுதி

| வ. எண் | வட்டம் | வட்டச்செயலாளர் பெயர் (தலைமை) | தேதி | சொற்பொழிவாளரின் பெயர் |
|---|---|---|---|---|
| 1. | 62 | ஆர். ஜெகதீசன் | 13.12.2024 | சைதை சாதிக் + லேகா |
| 2. | 62அ | கே. மகேஷ் | 27.12.2024 | ஈரோடு இறைவன் + கோகுல் |
| 3. | 63 | பா. பிரபாகரன் | 15.12.2024 | சேலம் சுஜாதா + இம்ரான் |
| 4. | 63அ | மு. சின்னராஜ் | 19.12.2024 | சிவாஜி கிருஷ்ணமூர்த்தி + ஜோதி |
| 5. | 114 | கே. கோபி | 17.12.2024 | மதிவதனி + மாறன் |
| 6. | 114அ | ஏ. தமீம் அன்சாரி | 09.12.2024 | நெல்லிக்குப்பம் புகழேந்தி + லேகா |
| 7. | 115 | ஜி. வெங்கடேசன் | 21.12.2024 | ஆடுத்துறை உத்திராபதி + திருச்சி சேகர் |

### திருவல்லிக்கேணி பகுதி

| வ. எண் | வட்டம் | வட்டச்செயலாளர் பெயர் (தலைமை) | தேதி | சொற்பொழிவாளரின் பெயர் |
|---|---|---|---|---|
| 1. | 115அ | K.G.செந்தில்குமார் | 12.12.2024 | கரூர் முரளி + ரித்திக் சக்திவேல் |
| 2. | 116 | எஸ்.சசிகுமார் | 18.12.2024 | சிவாஜி கிருஷ்ணமூர்த்தி + பார்கவி |
| 3. | 116அ | ஜெ. விஜயகுமார் | 24.12.2024 | கந்திலி கரிகாலன் + எழும்பூர் கோபி |
| 4. | 119 | க.வே. மோகன் | 07.12.2024 | ராஜீவ் காந்தி + பேரரசன் |
| 5. | 119அ | லைனர் கே. பிரபு | 28.12.2024 | ஈரோடு இறைவன் + பூபதி |
| 6. | 120 | ICF. எம். சங்கர் | 25.12.2024 | தக்கோலம் தேவபாலன் + யாசர் அராபத் |
| 7. | 120அ | என். ரவி | 08.12.2024 | பொன்னேரி சிவா + சிவரஞ்சனி |

மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து நிகழ்ச்சிகளிலும் மாவட்டத்திற்கு உட்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள், அணிகளின் மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு / பொதுக்குழு உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், அணிகளின் மாவட்ட / பகுதி வட்ட அமைப்பாளர், தலைவர், துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், பகுதி / வட்டக் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் இந்நாள் / முன்னாள் நிர்வாகிகள் என அனைவரும் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்

**நே.சிற்றரசு**
செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.



சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்குப் பகுதி, 101 வது வட்ட தி.மு.க. சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா முன்னிட்டு டி.பிளாக் ஆர்.வி.நகர், மித்ரா மருத்துவமனையில் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு மதிய உணவினை சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன் ஆகியோர் வழங்கினார். இதில் அண்ணாநகர் வடக்கு பகுதிச் செயலாளர் ச.பரமசிவம், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், 101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ், 101 வது வட்டச் செயலாளர் க.கோவிந்தராஜ், 101 (அ) வட்டச் செயலாளர் சி.பி. திருமலை, பகுதி அவைத் தலைவர் பா.பிரபு, பகுதி துணை செயலாளர் கே.பி.சுரேந்தர், மாவட்டப் பிரதிநிதிகள் வி.ராஜேந்திரன், ஜெ.வீரமணி மற்றும் 101 வது வட்டம் மற்றும் 101 (அ) வது வட்டக் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### 200 மூத்த குடிமக்களுக்கு

# பயணவழிப் பைகளை வழங்கி அறுபடை வீடு ஆன்மிகப் பயணம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு கொடியசைத்து தொடங்கி வைத்தார்!

சென்னை, நவ. 28-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று முன்தினம் (26.11.2024) சென்னை, கந்தகோட்டம் முத்துக்குமாரசாமி திருகோயிலில் அறுபடை வீடு ஆன்மிகப் பயணத்தின் முதற்கட்ட பயணத்தில் பங்கேற்கும் 200 மூத்த குடிமக்களுக்கு பயணவழிப் பைகளை வழங்கி, ஆன்மிகப் பயணப் பேருந்துகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

பின்னர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற பிறகு ஆன்மிகப் பயணம் மேற்கொள்ள விரும்பும் மூத்த குடிமக்களின் பொருளாதார சூழல் மற்றும் அவர்களுடன் துணையாக சென்று உதவிடும் நிலை இல்லாமல் இருக்கின்ற மூத்த குடிமக்கள் பயன்பெறும் வகையில் கட்டணமில்லாமல் பல்வேறு ஆன்மிகப் பயணங்களை அரசு மானியத்தில் இந்து சமய அறநிலையத் துறை செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில் சீனாவில் உள்ள மானசரோவர் புனித பயணம் செல்லும் 500 நபர்களுக்கு அரசு மானியம் ரூ.40ஆயிரத்திலிருந்து ரூ.50 ஆயிரமாகவும், நேபாளத்திலுள்ள முக்திநாத் திருக்கோயிலுக்கு புனித பயணம் செல்லும் 500 நபர்களுக்கு அரசு மானியம் ரூ.10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

இராமேஸ்வரம் - காசி ஆன்மிகப் பயணத்தை ஒன்றிய அரசு செயல்படுத்துவதற்கு முன்பாகவே அறிவித்து செயல்படுத்திய ஆட்சி திராவிட மாடல் ஆட்சியாகும். 2022 - 23 ஆம் நிதியாண்டில் ரூ.50 லட்சம் அரசு மானியத்தில் 200 மூத்த குடிமக்களும், 2023 - 24 ஆம் நிதியாண்டில் ரூ.75 லட்சம் அரசு மானியத்தில் 300 மூத்த குடிமக்களும் காசிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அதனைத் தொடர்ந்து இந்தாண்டு ரூ.1.05 கோடி அரசு மானியத்தில் 420 மூத்த குடிமக்கள் வருகின்ற 2025 பிப்ரவரி மாதம் அழைத்துச் செல்லப்பட உள்ளனர். ஆடி மாதத்தில் அம்மன் திருக்கோயில்களுக்கும், புரட்டாசி மாதத்தில் வைணவ திருக்கோயில்களுக்கும் ஆண்டுதோறும் தலா 1,000 பக்தர்கள் கட்டணமின்றி அழைத்துச் செல்லப்பட்டு வருகின்றனர். இதற்கு ஆண்டுதோறும் ரூ.50 லட்சம் அரசு மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

மூத்த குடிமக்களுக்காக அறுபடை வீடு ஆன்மிகப் பயணம் 28.01.2024 அன்று இதே கந்தக்கோட்டத்தில் தொடங்கப்பட்டு 5 கட்டங்களாக 1,008 பக்தர்கள் பயன்பெற்றுள்ளனர். இரண்டாவது ஆண்டாக இன்றைய தினம் சென்னை மண்டலத்திலிருந்து 90 நபர்களும், காஞ்சிபுரம் மண்டலத்திலிருந்து 60 நபர்களும், வேலூர் மண்டலத்திலிருந்து 50 நபர்களும் என மொத்தம் 200 நபர்கள் 3 நாட்கள் ஆன்மிகப் பயணமாக புறப்படுகின்றனர். 2025 ஆண்டு மார்ச் மாதத்திற்குள் 1,008 மூத்த குடிமக்கள் அறுபடை வீடு ஆன்மிகப் பயணத்தை நிறைவு செய்வார்கள். இத்திட்டத்திற்காக அரசு ரூ.1.58 கோடி நிதி வழங்கியுள்ளது.

இந்த ஆட்சி வந்த பிறகு முதல் முதலில் அறிவித்து செயல்படுத்தப்பட்ட பௌர்ணமி திருவிளக்கு பூஜை திட்டமானது தற்போது 17 அம்மன் திருக்கோயில்களில் நடைபெற்று வருகிறது. இதில் ஒவ்வொரு திருக்கோயில்களிலும் பௌர்ணமி தினத்தன்று 108 சுமங்கலி பெண்கள் பங்கேற்கின்றனர். மொத்த செலவில் நான்கில் ஒரு பங்கு கட்டணம் பக்தர்களிடமிருந்து பெறப்பட்டும், இதர மூன்று பங்கு திருக்கோயில் நிர்வாகமும் வழங்குகிறது. இதுவரை திருவிளக்கு பூஜை திட்டத்தில் 47,304 பெண்கள் பயன்பெற்றுள்ளனர். அதேபோல் திருக்கோயில்கள் சார்பில் கட்டணமில்லாமல் சீர்வரிசைகளுடன் திருமணம் நடத்தி வைக்கப்படுகிறது. 2022 ஆம் ஆண்டில் 500 இணைகளுக்கும், 2023 ஆம் ஆண்டில் 600 இணைகளுக்கும் திருமணம் நடத்தி வைக்கப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டிற்கு அறிவிக்கப்பட்ட 700 இணைகளுக்கான திருமணங்களில் 400 திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டுள்ளன.

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு மூன்றாண்டுகளில் மானசரோவர் மற்றும் முக்திநாத் ஆன்மிகப் பயணங்களுக்கு சென்று வந்த 3000 பக்தர்களுக்கு அரசு மானியமும், காசி - இராமேஸ்வரம் ஆன்மிகப் பயணத்தில் 920 பக்தர்களும், ஆடி மாத அம்மன் திருக்கோயில் பயணத்தில் 3000 பக்தர்களும், புரட்டாசி மாத வைணவ திருக்கோயில் பயணத்தில் 3000 பக்தர்களும், அறுபடை வீடு ஆன்மிகப் பயணத்தில் இரண்டாண்டுகளில் 2,016 பக்தர்களும் பயன்பெற்றுள்ளனர்.

சூரியனார் கோயில் ஆதீனம் நியமனம் தொடர்பாக சட்ட ஆலோசனைகள் நடைபெற்று வருகின்றன. டிசம்பர் 5-ந் தேதி தர்மபுரம் ஆதீனத்திற்கு சொந்தமான திருக்கடையூர் திருக்கோயிலில் புதிய வெள்ளித் தேர் வெள்ளோட்டத்தினை தொடங்கி வைக்க உள்ளோம். அன்றைய தினம் அனைத்து ஆதீனங்களும், ஒன்று கூடுவதாக தெரிவித்துள்ளார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைகளை பெற்று துறை சார்ந்த உயர் அலுவலர்கள் மற்றும் சட்ட வல்லுனர்களுடன் கலந்து ஆலோசித்து இறுதி முடிவு எடுக்கப்படும்.

எல்லோருக்கும் எல்லாம் என்று ஆட்சி செய்யும் முதல்வர் அவர்கள், எந்த மதத்தினரையும் இழிவுபடுத்துவதை நிச்சயமாக அனுமதிக்க மாட்டார். கானா பாடகி இசைவாணி பாடிய பாடல் சர்ச்சை குறித்து புகார் அளிக்கப்பட்டுள்ளது என பத்திரிகை வாயிலாக அறிந்தேன். இது குறித்து சட்ட வல்லுனரோடு கலந்து ஆலோசித்து தவறு இருப்பின் உறுதியான நடவடிக்கையை இந்த ஆட்சி எடுக்கும். மதத்தால், இனத்தால் மக்களை பிளவுபடுத்துகின்ற சக்திகள் இந்த ஆட்சியில் தலை தூக்க முடியாது என்பதில் முதலமைச்சர் அவர்கள் உறுதியாக இருக்கின்றார்கள்.

இந்த சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படும் கல்லூரிகளில் இந்து அல்லாதவர்களை நியமிக்க கூடாது என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்து சமய அறநிலைத்துறை சட்டமும் அதைத்தான் சொல்கிறது. எனவே, நீதிமன்றம் வழிகாட்டுகின்றபடி சட்ட வல்லுனரோடு ஆலோசித்து அதன்படி செல்வோம்.

கடந்த ஆண்டு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வேப்பேரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தங்கர் பச்சன் அவர்கள் முதல்வரை புகழ்ந்து பேசிய அளவிற்கு இதுவரை திராவிட முன்னேற்றக் கழக பேச்சாளர் கூட பேசியிருக்க மாட்டார்கள். அந்த அளவுக்கு புகழ்ந்தவர். தற்போது விமர்சித்துள்ளார். இரட்டை நாக்கு படைத்தவர்களுக்கெல்லாம் பதில் சொல்ல விரும்பவில்லை.

யானைக்கு புத்துணர்ச்சி முகாம் குறித்து தெளிவான விளக்கங்களை ஏற்கனவே அளித்துள்ளோம். இந்த ஆட்சியில் திருக்கோயில் யானைகளுக்கு அங்கேயே குளியல் தொட்டி, நடைபாதை, மாதம் இருமுறை மருத்துவ பரிசோதனை, மருத்துவர்களின் ஆலோசனையின்படி உணவுகள் என அனைத்து வசதிகளும் ஏற்படுத்தி தரப்பட்டுள்ளது. எனவே, புத்துணர்ச்சி முகாம் தேவைப்படவில்லை. அதற்கான தேவை ஏற்படுமாயின் நிச்சயம் அதையும் மேற்கொள்ள இந்த ஆட்சியும் இந்து சமய அறநிலைத்துறையும் தயாராக இருக்கின்றது.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், இணை ஆணையர்கள் ச.லட்சுமணன், பொ.ஜெயராமன், திருமதி ஜ.முல்லை, உதவி ஆணையர் கே.சிவக்குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, மெரிடியன் மருத்துவமனை நடத்திய மாபெரும் மருத்துவ முகாம் மற்றும் டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனை நடத்திய கண் சிகிச்சை முகாம் 23 வது வட்டம் காவாங்கரை பகுதியில், வட்டச் செயலாளர் பி. எஸ். சந்துரு தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் 300க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயனடைந்தார்கள். அனைவருக்கும் மருந்து மாத்திரைகள், கண் கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்பட்டன. மாவட்ட ,பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள்,பாக முகவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 34வது வட்டத்தில் பெரம்பூர் வடக்கு பகுதி பொருளாளர் அ.செந்தூர் பாண்டியன் தலைமையில் மாமன்ற உறுப்பினர் திருமதி.ஷர்மிளா காந்தி கருணாநிதி கழகக் கொடியேற்றி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் தென்றல் நகர் ப.சீனிவாசன், ஆர் சோலையம்மாள், எம்.ராமசாமி, சி.பாலமுருகன், சிந்தாமணி, பாஸ்கரன், ஆர்.பி.எஸ்.சத்தியஸ்வரி, வட்டக் கழக நிர்வாகிகள் ஆர்.பி.சத்தியேந்திரன், கே.ராஜகோபால், கே.தினகரன், இ.யூசுப் மற்றும் எவரடி காலனி கலைஞர் மன்ற நிர்வாகிகள் தலைவர் ஏ.ஆர்.கோபால் போட்டோகிராபர் மணி, ராஜசேகரன், வழக்கறிஞர் குமரன், பாலாஜி நகர் கருணாநிதி, ஸ்ரீராம் நகர் காளிமுத்து, பி.தண்டாயுதபாணி, முரளி கிருஷ்ணன், தினேஷ், ராஜ், பாலாஜி, கங்கமுத்து மற்றும் கழகச் செயல் வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.